[illegible]

[illegible]

ᖱ

Y31ᵐ2,N26

N28·3·2

199374

ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டிகலெக்டர்

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] ஆகஸ்ட், 1928 [நெ. 2

THE REGISTRAR OF BOOKS
7-NOV 1928
MADRAS

பொருளடக்கம்.

நெ.		பக்கம்.
7.	பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு விஞ்ஞாபனம்	23
8.	இந்திய ஞானமார்க்கமும் இந்திய கிராம முன்னேற்றமும்	24
9.	சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் முயற்சிகள்	26
10.	கலெக்டர்களின் கன்பரன்ஸ்	28
11.	விவசாய விஷயங்களைபற்றி ஒரு கன்பரன்ஸ்	29
12.	குழந்தைகளுக்கு க்ஷய ரோகம் வருவதைத் தடுப்பது எப்படி?	31
13.	மனிதனுக்கு எவ்வளவு நிலம் வேண்டும்?	32
14.	பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள்	33
15.	சுற்றுப்பிரயாணங்கள் செய்யும் பள்ளிக்கூடம்	36
16.	சீனதேசத்து விவசாயிகள் எரு சேகரிக்கும் முறை	41
17.	பஞ்சாயத்துகளும் பொது ஜன ஆரோக்கியமும்	43

Annual Subscription (inclusive of Postage)
Inland Rs. 3 : Foreign Rs 4—8—0.
Single copy, Inland As 6 : Foreign As 8.

Rural India reaches the Villages and Towns of India
It is the best medium for advertisement.

அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தா தொகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்த பணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டாரின் கட்டடபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி.
பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.

முகாம் :—பாலவாக்கம்
ஊத்துக்கோட்டை போஸ்ட்டு
செங்கல்பட்டு ஜில்லா.

டாக்டர் 'ஜீ' பீ. என்பவரின் சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.

REGISTERED TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்

தபால் பெட்டி நெ. 510
விலாசம் "மெடிகேடெட்"

பார்க் டவுன்,
சென்னை

அறிவிப்பு.

சகலமான பாரஸ்ட் பஞ்சாயத்து பிரிஸிடெண்டுகளுக்கும் மெம்பர்களுக்கும் சென்னை பாரஸ்ட் பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட் பிரஸிடெண்ட் தெரிவித்துக்கொள்வதாவது :—

1. சென்ற 3, 4 மாதகாலமாய் ஒவ்வொரு மாதத்திய "ரூரல் இந்தியா" பத்திரிகையிலும், நமது யூனியனில் ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் ஷேர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்தும் அனேக மெம்பர்கள் ஷேர்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது ரொம்பவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்திலுள்ள பிரிஸிடெண்டும் மற்றும் இதர மெம்பர்களும் இதுவரையில் ஷேர்களை எடுத்துக்கொள்ளாமலிருந்தால், யூனியனிலிருந்து ஷேர் பாரங்களை உடனே தருவித்து ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பர்களையும் யூனியனில் ஷேர்கள் எடுத்துக்கொண்ட மெம்பர்களாகச் சேர்த்து நமது யூனியனை முன்னுக்குக்கொண்டுவரவேண்டியது அவர் அவர்களுடைய ரொம்பவும் முக்கியமான கடமை. ஆகையால் இந்த வேண்டுகோளை ஒவ்வொரு பஞ்சாயத்தும் நன்றாய்க் கவனித்து தங்களுடைய பஞ்சாயத்து மெம்பர்களில் ஒவ்வொருவரையும் ஷேர் எடுத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் கொஞ்சம்கூட அசிரத்தையாயிருக்கக்கூடாது என்று கேட்டு கொள்ளுகிறேன்.

2. சென்ற செப்டம்பர்மீ த்தில் நடந்த மஹாசபையில் விஜயம் செய்திருந்த அனேகம் பஞ்சாயத்தார்கள் அடுத்த (Conference) கன்பரன்ஸை 1928 ௵ டிசம்பர்மீ லேயே நடத்தினால் எல்லாபஞ்சாயத்தார்களும் வந்திருந்து கன்பரன்ஸை நன்றாக நடத்திவைக்க சௌகரியமாக இருக்குமென்று சொன்னதின் பேரில் அப்படியே கான்பரன்ஸை டிஸம்பர்மீ ல் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக்கும் டிசம்பர்மீ -ல் நடத்துவதில் இருக்கும் சௌகரிய சௌகரியங்களுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்தும் அக்டோபர்மீ 20உ-க்குள் அடியில் கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

3. நமது "ரூரல் இந்தியா" பத்திரிகைக்கு அநேக பஞ்சாயத்துகள் சென்ற இரண்டு வால்யூம்களுக்கும் சந்தா தொகையை பல தடவைகளில் பத்திரிகையின் மூலமாய் கேட்டும் இன்னும் அனுப்பவில்லை. அதையும் உடனே அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பிவிடவும். அப்படிக்கும் இந்த மாத கடைசிக்குள் வராத பஞ்சாயத்துகளுக்கு செப்டம்பர்மீ -த்திய (வால்யும் III, நெ. 3) பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். அப்படிக்கு வரும் வி. பி. யை ஒவ்வொரு பஞ்சாயத்தும் அங்கீகரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

A. ராஜகோபால ரெட்டி,
பிரஸிடெண்டு, பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு,

முகாம் :—பாலவாக்கம். ஊத்துக்கோட்டை போஸ்ட்டு,
செங்கல்பட்டு ஜில்லா.

ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமினாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] ஆகஸ்ட்டு, 1928 [நெ. 2

பாரரெஸ்டு ப்பஞ்சாயத்துகளுக்க விஞ்ஞாபனம்.

தென் ஆர்காடு ஜில்லாவில் பஞ்சாயத்து விஷயங்களில் அனுபவம் வாய்ந்த பஞ்சாயத்தார் ஒருவர் பஞ்சாயத்துகள் பெர்மிட்டுகளையும், புரோஸீடிங்க்ஸ் புத்தகங்களையும், கணக்குப் புஸ்தகங்களையும் இன்னும் இதர பாரங்களையும் பல இடங்களிலிருந்து தனித்தனியாக ஆர்டர் செய்து தருவித்துக்கொள்வதால் பஞ்சாயத்துகளுக்கு அதிகச்சிலவு ஏற்படுகிறதென்றும், இவ்வித ரிகார்டுகள் ஒரே ஒழுங்கில் இருக்கவில்லையென்றும், ஆதலால் எல்லாப்பஞ்சாயத்துகளிற்கும் வேண்டிய பெற்மிட்டுகளும், புஸ்தகங்களும் ஒரே வழியில் யூனியனால் தயாரிக்கப்பட்டுப் பஞ்சாயத்துகளிற்குக் கொடுக்கப்பட்டால் அவைகள் யூனியனின் முத்திரையை வகித்து ஒழுங்கான ரிகார்டுகளாக விருக்கும் என்றும், மேலும் அதிக அளவுகளில் ஆர்டர்கள் அச்சுக் கூடங்களிற்கும், மொத்தமாக யூனியனால் கொடுக்கப் படக்கூடுமானதால் இவ்வகைகள் வெகு குறைவான சார்ஜுக்குத்தயாரிக்கப்பட்டு தாமதமில்லாமல் பஞ்சாயத்துகளுக்கு ஸப்ளை செய்யப்படக்கூடு மென்றும் சொல்லுகிறார். தவிரவும், சில பஞ்சாயத்துகள் பெர்மிட்டுகளை வரிசைக்கிரம நம்பர் அவைகளில் அச்சிடப்படாமலே தயாரித்து உபயோகிக்கின்றனவென்றும், அப்படிப்பட்ட வழக்கமானது பல வித சீர்கேடுகளிற்கும், அசுத்த வழிகளுக்கும் இடங்கொடுக்கக்கூடியதென்றும். யூனியனே பெர்மிட்டுகளைத்தயாரித்துக் கொடுத்தால் அவைகளில் யூனியனின் முத்திரை பதியப்படுவதுடன் வரிசைக்கிரம நம்பர்களும் அந்தந்தப் பஞ்சாயத்துக்கென்ற பிரத்தியேகவரிசைகளுடன் அச்சிடப்படக் கூடுமென்றும் சொல்லுகிறார். சென்னையில் இந்த ரிகார்டுகளெல்லாம் குறைந்த சார்ஜில் தயாரிக்கப்படுவதற்குச் சௌகரியங்களிருக்கின்றன.

பஞ்சாயத்துகள் அவைகளுக்கு வேண்டிய பெர்மிட்டுகளையும் புத்தகங்களையும் விவரமாகத் தெரிவித்து சுமார் பாதி பணத்தை முன்னதாக அனுப்பினால் அவைகள் யூனியனால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும்.

Indian Idealism and Rural India.

இந்திய ஞானமார்க்கமும் இந்திய கிராம முன்னேற்றமும்.

[இது மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ் ராமசாமி சாஸ்திரிகள் பீஏ, பி.எல் அவர்களால் எழுதப்பட்டது]

மனிதன் உலகத்தில் பிறக்கும்போதே தன் முன்னோர்கள் பண்டைகாலங்களில் வாழ்ந்த வாழ்வுகளின் அடையாளங்களோடு பிறக்கிறான். தவிர, அவன் பிறந்த பின்பு அவனைச்சுற்றியிருப்பனவைகளும் அவனுடைய வாழ்வை மாற்றுகின்றன. அவன் தன்னுடைய வர்க்கவித்யாஸங்களைக் கொள்வதுடன் வாஸஸ்தல வித்தியாஸங்களால் ஏற்படக்கூடிய வித்தியாஸங்களையும் கொள்கிறான். ஆசியாகண்டத்தவர்கள் மற்றகண்டங்களைச்சேர்ந்தவர்களின் வாழ்வைப்போல் வாழ்வையநுசரியாமல் தனிப்பட்டவாழ்வைநடத்தி தனிப்பட்டநாகரீகத்தை வஹித்துவந்தார்கள் என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஆசியாகண்டத்தின் விசாலமான சமபூமிகளும், உயர்ந்தமலைத்தொடர்களும், பெரிய நதிகளும், மேட்டுபூமிகளும் அதில் பண்டைகாலங்களில் பல இராஜாங்கங்கள் வாழ்ந்தனவென்பதும், பல மதங்கள் உண்டாகி உன்னத ஸ்திதியிலிருந்தனவென்பதும், தலைமுறைத்தலைமுறையாக ஜனங்களின் வாழ்வை உயர்த்திவருகின்றன. கவி ரவீந்திரநாத்தாகூர் சொல்வதுபோல் ஆசியாவின் ஜனங்கள் ஈசுவரரஹஸியத்தையறியமுயலுவதில் மனதைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் லோக வியவஹாரசூழ்ச்சிகளில் மனதை அதிகமாகச்செலுத்தவேயில்லை. இந்தியாதேசம்தான் ஆசியாவின் மதஉணர்ச்சிகளுக்குப் பிரதான இடமாகவிருந்துகொண்டிருக்கிறது. பார்சிக மதமாகியஜொராஸ்திரியமதமும் ஆர்யமதமே. பௌத்தமதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்கும் ஜப்பானிற்கும் பரவிற்று. இந்துமததேவர்களின் பிரதிமைகள் ஜப்பானில்பார்க்கப்படுகின்றன. பர்மா, சிலோன், ஜாவா, பலி, மெஸொபொடேமியா இந்ததேசங்களில் எல்லாம் இந்தியமத அடையாளங்களிருக்கின்றன. இவ்விதமதஉணர்ச்சிகளை இந்தியாதேசத்திலேயே பிறந்தவையேயொழிய சிலர் ஸ்தாபிக்கமுயர்ச்சிசெய்தபடி

அவைகள் இந்தியாவிற்கு வேறு தேசங்களிலிருந்து வந்தவைகளல்ல.

இந்தியாவானது மேற்குதேசங்களிற்கும் கிழக்குதேசங்களிற்கும் மத்திய இடமாகவிருந்துகொண்டு மேனாட்டுவழிகளையும்கிழக்குதேசவழிகளையும் கொண்டிருக்கிறது. ஜனங்களுள் சமூகவாழ்வும் ராஜீயவிஷயஏற்பாடுகளும் சரிவர அமைந்திராவிட்டால் இந்தியாவில் கல்வியும்விவேகமும் உன்னதஸ்திதியில் இருந்திருக்காது. இந்தியர்கள் பண்டைகாலத்தில் இதரநாடுகளில் குடியேறினார்களென்பதை நாம் சரித்திர பூர்வமாக அறிந்திருக்கிறோம். அவர்கள் வியாபாரத்தின் நிமித்தமாகவும் இந்தியாவின் ஞானமார்க்கத்தைப்பரவச்செய்ய வேண்டியநிமித்தமாகவும் அன்னியநாடுகளில் குடியேறினார்கள். இந்தியர்கள் பண்டைகாலங்களில் திறமைவாய்ந்த கப்பலோட்டிகளாகவிருந்தார்கள் இந்தியாவானது தன்னுடையபுத்திபலத்தை உணர்ந்துகொண்டேயிருந்திருக்கிறது, அப்படி தன்னுடைய புத்தியின் அளவையுணர்ந்திருந்தபோதிலும் அது பிறரிடத்தில் விசுவாஸத்தை கொண்டிருந்ததேயொழிய அவர்களை வெறுக்கிறசுபாவத்தைக்கொள்ளவேயில்லை. இந்தியாவில் எல்லாபாகங்களிலும் கோயில்களும், யாத்திரைசெய்ய வேண்டிய ஸ்தலங்களும், புண்ணிய நதிகளுமிருக்கின்றன. இந்துக்கள் இவைகளில், பக்தியைவைத்து கொண்டாடுகிறார்கள். வேதங்கள் ஜனங்கள் நிலங்களின்சம்மந்தமாகவும், வாழ்வுமுறை சம்மந்தமாகவும், தர்மங்களின் சம்மந்தமாகவும், உயர்வான உணர்ச்சிகளை வஹித்திருந்தார்களென்பதை வெளியிடுகின்றன.

மேற்கூறியபடி வெகுகாலமாய் வாழ்ந்துகொண்டு, சரியானஸ்தலத்தில் அமைந்து, ஞானத்திலும் விவேகத்திலும் உயர்வை வஹிக்கிற இந்தியாதேசம் தான் இனி உலகத்திற்கெல்லாம் ஞானத்தையும் விவேகத்தையும் உபதேசித்து மேனாட்டுதேசங்களுக்கும் கிழக்குதேசங்களுக்கும் மத்தியஸ்தஇடமாக ஏற்படக்கூடும். சரியான ஜனஆக்ஷி வழிகளை இந்தியா எக்காலத்திலும் தள்ளவில்லை. இந்தியாவானது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களை ஜன ஆக்ஷிவழிகளுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கமுயலுகிறது. உரிமை, போட்டி இவ்வித உணர்ச்சிகளைக்காட்டிலும் தர்மம் அல்லது நீதி, கூட்டுறவு, இவ்வகை உணர்ச்சிகளை அதிகமாகக்கொள்ள முயலுகிறது. ஈசுவர உபாஸனையில் மனிதன் தனிமையையனுசரிக்க வேண்டியதாகவேயிருக்கிறது. ஆனபோதிலும், சமூகவாழ்விற்கும் ஜனஆக்ஷிவழிக்கும் இது இடையூறாக ஏற்படாது. ஞானிகளின் உபதே

199374

சங்களை இந்திய ஜனங்கள் கௌரவப்படுத்தினார்கள். ராஜீயவிஷயங்களிலும் ஞானவான்களின் உபதேசம் கைப்பற்றப்பட்டது. பண்டைகாலத்திய இராஜாங்கங்கள் ஒரே அதிபதியால் ஆளப்பட்டிருந்தபோதிலும் அவ்வதிபதி நிறைவாய்ந்த மந்திரிக்கூட்டத்தார்களினாலும், நிபுணர்களினாலும் உபதேசிக்கப்பட்டு ஜனங்களால் கவனிக்கப்பட்டு. கடவுளுக்குபயந்து நடந்தமையால் அவ்வகை இராஜாங்க முறையை ஜன ஆக்ஷியென்றே சொல்லவேண்டும். ஆகவே ஜன ஆக்ஷி யென்பது இந்தியாவிற்குப்புதிய ஆக்ஷிமுறையேயன்று. மேலும், இந்தியாவானது இப்பொழுது அரசர், பிரபுவர்க்கம், ஜனங்கள் இவர்கள்சேர்ந்த ஆக்ஷிமுறை ஒன்றையே கோருகிறது.

Forest Panchayats in Madras.

1927-28-ம் வருஷத்தில் சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் முயர்ச்சிகள் (ரெவின்யூ போர்டாரின் ரிபோர்டின் ஸங்கிரஹம்.)

1928-ம் வருஷம் ஜனவரி மாதம் 1உயிலிருந்து பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் ஜில்லாகலெக்டர்களின் மேல் பார்வைக்கு மாற்றப்பட்டன. ஸ்பெஷல் இலாகாவானது தென்கன்னடம்தவிர மற்ற எல்லா பாரெஸ்டு பஞ்சாயத்துகளுள்ள ஜில்லாக்களிலும் அதிகாரம் வஹித்தது. 1928-ம் வருஷம் மார்ச்சுமாதம் 31உயில் நமது மாஹாணத்தில் 22பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களிருந்தார்கள். நடைபெருகிற வருஷத்தில் 3 பஞ்சாயத்து டிப்டிதாசில்தார்கள் அதிகமாக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் சித்தூர், கடப்பை, பெல்லாரி ஜில்லாக்களுக்கு நியமிக்கப்பட்டனர். 1927-28ம் வருஷத்தில் 1130 பாரெஸ்டு பஞ்சாயத்துகள் நமது மாஹாணத்தில் இருந்திருக்கின்றன. அவைகள் 3353 சதுர மைல்கள் தேறிய மொத்த விஸ்தீரணத்தை நிர்வஹித்தன. அவைகள் ரூ 1,57, 266 குத்தகைப்பணத்தை கவர்மெண்டுக்கு செலுத்தியன. இதற்கு முந்தின வருஷத்தில் 985 பஞ்சாயத்துகள் இருந்தன. அவைகள் 2855 சதுரமைல்கள் தேறிய மொத்த விஸ்தீரணத்தை நிர்வஹித்து கவர்மெண்டுக்கு ரூ 1, 28, 957 குத்தகைப்பணத்தைச்செலுத்தியன. தென்கன்னடத்தில் 3½ சதுரமைல்கள் மொத்த விஸ்தீரணத்தை நிர்வஹிக்கிற 13 பஞ்சாயத்துகளிருக்கின்றன. அவைகள் கவர்மெண்டுக்குக் குத்தகைப்பணத்தை செலுத்துகிறதில்லை.

III-ம்வகுப்பு ரிஸர்வுகளிற்காக ஏற்பாடுகள் முடிக்கப்பட்டன. அக்ரிமெண்டுகள் ஏதோ சில ஜில்லாக்களில் சில பாபத்துகளில் தவிர அநேகமாய் எல்லாப்பஞ்சாயத்துகளாலும் பூர்த்தி செய்யப்பட்டன.

1927-28இல் பஞ்சாயத்துககாடுகளில் 675,632½ பசு யூனிட்டுகள் மேய்ந்தன. இதற்குமுந்தின வருஷத்தில் 475, 358 யூனிட்டுகள் தான் மேய்ந்தன. மேய்ச்சல் கட்டணங்கள் பசுயூனிட்டுஒன்றுக்கு2½ அணாவிலிருந்து ரூ1-4-0 வரையில் பஞ்சாயத்துகளால் விதிக்கப்பட்டிருந்தன.

1927-28இல் பஞ்சாயத்துகள் 1897 வாட்சர்களை வைத்துக்கொண்டிருந்தன. இதற்குமுந்தின வருஷத்தில் 1264 வாட்சர்கள் தானிருந்தார்கள்.

அக்ரிமெண்டுகளில்குறிப்பிட்ட ஸங்கியைக்குமேல்பட்டு மாடுகளை மேய்க்க பெர்மிட்டுகள் சில பஞ்சாயத்துகளால் கொடுக்கப்பட்டன. பஞ்சாயத்துக்காடுகளில் இப்படிப்பட்ட அதிக மேய்ச்சல் கூடாதென்றும் பெர்மிட்டில் கண்டசங்கியைக்கு மேல்பட்ட சங்கியையான மாடுகள் மேய்க்கப்படக்கூடாதென்றும் அதிகாரிகள் உத்திரவிட்டதின்பேரில் இவ்வித வழக்கம் குறைந்து போய்க்கொண்டிருக்கிறது.

1927-28இல் 5912குற்றங்கள் பஞ்சாயத்துகளால் ரிபோர்டு செய்யப்பட்டன. இவைகளில் 3986குற்றங்கள் ரூ34351க்கு கம்பவுண்டு செய்யப்பட்டன. இதற்கு முந்தினவருஷத்தில் 4819குற்றங்கள் ரிபோர்டுசெய்யப்பட்டன, 3256குற்றங்கள் ரூ24869க்கு கம்பவுண்டுசெய்யப்பட்டன. இதுவரையில் குற்றங்களைக்கம்பவுண்டு செய்ய அதிகாரம் 31 பஞ்சாயத்துகளுக்குக்கொடுக்கப்பட்டது.

1130 பஞ்சாயத்துக்களில், 1097 பஞ்சாயத்துகளைப்பற்றி ரிபோர்டுகள் போர்டாருக்கு கிடைத்தனவாம். அவைகளில் 124 பஞ்சாயத்துகளின் வேலை உயர்வாயிருந்ததாம், 591 பஞ்சாயத்துகள் நடுத்தரமாக வேலைசெய்தனவாம், 170 பஞ்சாயத்துகள் முந்தியைக்காட்டிலும் கொஞ்சம் மேலாக வேலை செய்தனவாம், 212 பஞ்சாயத்துகள் சரியாக வேலைசெய்யவில்லையாம்.

307 பஞ்சாயத்துகள் 1927-28இல் ரூ 23770 செலவு செய்து கிணறுகளை வெட்டி, குட்டைகளை வெட்டி ரிபேர்செய்தனவாம். இதற்கு முந்தினவருஷத்தில் 384 பஞ்சாயத்துகள் ரூ 17473 செலவு

செய்து இம்மாதிரிவேலைகளைச்செய்தனவாம், 59 பஞ்சாயத்துகள் நாகதாளிமுதலிய முள்செடிகளை ரூ 2048 செலவு செய்து வெட்டியனவாம். இதற்குமுந்திய வருஷத்தில் இவ்வேலையில் பஞ்சாயத்துகளின் செலவு ரூ 2530-9-0-. 1927-28இல் லாண்டு ரெவினியூ கமிஷனர் அவர்கள் 37 பஞ்சாயத்துகளைப்பார்வையிட்டார், 15 ஜில்லாக்களின் கலெக்டர்கள் 112 பஞ்சாயத்துகளைப்பார்வையிட்டார்கள் 40 ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் 200 பஞ்சாயத்துகளைப்பார்வையிட்டார்கள், பாரெஸ்டுபஞ்சாயத்து ஆபீஸர் 173 புதுப்பஞ்சாயத்துகளை நிர்மாணம் செய்தார். டிப்டி தாசில்தார்கள் இடைவிடாமல் இவ்விஷயத்தில் செய்திருக்கிறார்கள்.

செங்கல்பட்டு ஜில்லாவில் ஆர்லெனிக் பெண்டாக்சைடினால் நாகதாளிபொதார்களை அழித்துப்பார்கிறார்கள். கமிஷனர் அவர்கள் இந்தவிஷயத்தில் முயற்சிகளை யெடுத்துக்கொண்டிருக்கிறார். ஆர்லெனிக்பெண்டாக்ஸைடை இஞ்செகடு செய்வதால் ஏற்படும் பயன்களை கவனித்து ரிபோர்டு செய்யும்படி கமிஷனரவர்கள் கலெக்டருக்கு உத்திரவு செய்திருகின்றனர்.

ஆவாரம்பட்டைகளை யெடுத்து மேல் மேல் வியாபாரம் செய்யும்படியும், அவைகள் இல்லாத இடங்களில் அவைகளைப்பயிர் செய்யும்படியும் பஞ்சாயத்தார்களுக்குப்போதனைகள் செய்யப்படுகின்றன

Collectors' Conference.
கலெக்டர்களின் கன்பரன்ஸ்

கலெக்டர்களுடைய கன்பரன்சு உதகமண்டலத்தில் ஸெக்ரிடேரியட் கட்டிடத்தில் ஜூலை 2உ யிலிருந்து 9உ வரையில் நடைபெற்றது. அநேகமுக்கியமான விஷயங்கள் இந்தக் கன்பரன்ஸால் ஆலோசிக்கப்பட்டன. வரவு சிலவு திட்டங்கள் தயாரிக்கப்படுகிற வகையிலும் சிலவுகள் செய்யப்படுகிற விஷயங்களிலும் மேல்பட்ட ஜாகிருதையான து எடுத்துக்கொள்ளப்படவேண்டியது என்கிற விஷயமும், பப்ளிக் வொர்க்ஸார் நடத்தப்பட்ட பெரிய இஞ்சினீரிங்கு வொர்க்ஸுகளின் சம்பந்தமாய் அப்போதைக்கப்போது நடந்தேரிய வேலைகளின் விவரங்கள் கலெக்டர்களுக்குத்தெரிவிக்கப்படவேண்டுமென்கிறவிஷயமும், தாழ்ந்த வகுப்பினர்களுக்கு அதிகமாக தர்காஸ்துகள் கொடுக்கப்படவேண்டுமென்கிற விஷயமும், ரெவினியூரிகவரி சட்டத்தின் மூலமாய் கோ ஆபரேடிவ் லொஸைடிகளிற்குச் சேர

வேண்டிய பாக்கித்தொகைகள் வசூலிக்கப்பட வேண்டுமென்கிற விஷயமும், அதிக டிராவெலர்ஸ் பங்களாக்கள் வேண்டுமென்கிற விஷயமும், லோகல்பாடிகளுக்கு லாண்டுஸெஸ் தொகைகள் கணக்குகளில் வரவுவைக்கிற வழியில் சீர்திருத்தமும், பவுண்டுகள், சாவடிகள், இவைகள் சரிவர பாதுகாக்கப்படவேண்டிய விஷயமும், ஸாகுபடி நிலங்கள் குடும்பங்களில் பாகங்கள் செய்யுங்கால் அல்லது மற்ற எக்காரணங்களினாலாவது சின்னபின்னங்களாக ஆவதைத்தடுக்க வேண்டிய நிமித்தம் ஏற்பாடுகளும், பிஷரிகளின் விவரங்கள் ஏற்பட வேண்டிய விஷயமும், லாண்டு இம்புரூவ்மெண்டு லோன்சு ஆக்ட் அக்ரிகல்ச்சரிஸ்ட் லோன்ஸ் ஆக்ட் இவைகளின் சம்பந்தமாய்க்கொடுக்கப்படும் கடன்களின் கணக்குகளில் சீர் முறைகளும, கள்ளுக்கடைகள் சாராயக்கடைகள் சம்பந்தமாயுள்ள லைஸென் சிங்கு போர்டு அட்வைஸரி போர்டு இவைகளின் வேலைகளைப்பற்றின விஷயமும், குடியினால் ஏற்படும் கெடுதிகளைப்பற்றி ஜனங்களுக்கு உபதேசங்கள் செய்யப்பட வேண்டுமென்கிற விஷயமும், அதிகமான நீர்பாசனவசதி ஏற்படவேண்டிய வழியில் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாக்காரர்களும் ரெவினியூ இலாகாக்காரர்களும் அதிக சிரத்தையை யெடுத்துக்கொண்டு பிளான்களையும் எஸ்டிமேட்களையும் செவ்வையாக கவனிக்க வேண்டுமென்கிற விஷயமும், இன்னும் இதர விஷயங்களும் கன்பரன்ஸால் ஆலோசிக்கப்பட்டன. ஆலோசனை செய்யப்படுவதில் கலெக்டர்களுடன் அநுபவம்வாய்ந்த தக்க மிராசுதார்களும் கன்பரன்ஸில் சேர்க்கப்பட்டால், அவர்களும் தங்களுக்கு அனுபவ பூர்வமாய் ஏற்பட்டுள்ள யோஜனைகளையும் சீர் முறைகளையும் சொல்வார்கள். இவ்விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டதின் பேரில் ஏற்பட்ட தீர்மானங்கள் கவர்மெண்டாரால் வெளியிடப்பட வில்லை. அவைகள்பொது ஜனங்களுக்கும் மிராசுதாரர்களிற்கும் தெரியப்படுத்தப்பட்டால், கவர்மெண்டாரும் கலெக்டர்களும் அதிகாரிகளும் செய்யப்பட்ட உயர்வான ஊழியம் அவர்களுக்கு நன்கு விளங்கும்.

The Agriculture Conference.
விவஸாய விஷயங்களைப்பற்றி ஒருகன்பரன்ஸ்

கோயம்புத்தூர் அகரிகல்ச்சரல் காலேஜைச்சேர்ந்த மாண்வசங்கமானது வருஷாவருஷம் அக்காலேஜில் படித்த பழய மாணவர்கள், அப்பொழுது படிக்கும் மாணவர்கள், இவர்களின் கன்பரன்சு

ஒன்றை நடத்துகிறது. இவ்வருஷத்திய கன்பரன்ஸ சென்ற ஜூலை மாதத்தில்நடந்தது. அதை நமது கவர்னர் அவர்கள் திறந்தார். கன்பரன்சில், கிராமாந்தரங்களில் விவஸாய ஸம்பந்தமாக நிரூபங்களைக்காட்டி பிரச்சாரம் செய்வதற்காக எல்லா விதச்சௌகரியங்களும் நிறைந்த மோட்டார்வண்டி ஒன்று காட்டப்பட்டது. வண்டியின் விலைரூ25000. விவஸாயநிபுணர்கள், விவ்வஸாய ரஸாயன சாஸ்திர நிபுணர் முதலியவர்கள் தங்களுடைய நிரூபண ஸம்மந்தமான சாமான்களை வைத்துக்கொள்வதற்காகப்பிரத்தியேக இடங்கள் அமைந்த ஒரு பாகத்தையும் உத்தியோகஸ்தர்கள் உட்கார்ந்து பிரயாணம் செய்வதற்காக சௌகரியங்கள்நிறைந்த மற்றொரு பாகத்தையும் அது உடைத்தாயிருந்தது. விளக்குப்படக்காக்ஷிக்குவேண்டிய கருவிகளும் சாதனங்களும் அதில் அமைந்திருந்தன. சிறப்புவாய்ந்த கவர்னர்அவர்கள் உபந்நியாஸத்தில் வியவசாய விசாரணையின் ரிபோர்டைப்பற்றி வெகுஉயர்வாகப் பேசினார். வியவசாய விசாரணை சபையார் பிரேரேபித்திருக்கிறசில சீர்முறைகளை கவர்மெண்டார் சீக்கிரத்தில் கைப்பற்றப் போகிறதாகவும் மொழிந்தார். இப்படி கவர்னர் அவர்கள் மொழிந்தது ஜனங்களுக்கு மிகுந்தசந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடியது. இன்னும் கவர்னர் அவர்கள் சொன்னதாவது: வியவஸாய இலாகா, கூட்டுறவு இலாகா, கல்வி இலாகா, பாரெஸ்டு இலாகா, மாட்டுவைத்திய இலாகா, சுகாதார இலாகா, ஆராய்ச்சி இலாகா இவைகள் கிராமாந்தர ஜனங்கள் பூர்ணசுகஸ்திதியை அடையவேண்டியநிமித்தம் ஒன்றுபட்டு வேலைசெய்ய வேண்டுமென்றும், கிராமஜனங்கள் நிரூபணங்களை நேருக்குநேரே பார்த்தாலொழிய அவர்கள் சீர்முறைகளைக்கைக்கொள்ள முயலமாட்டார்களென்றும், வட இந்தியாவிலும் இதரதேசங்களிலும் மேற்சொல்லியமோடார்வண்டி யேற்பாடு அனுஸரிக்கப்பட்டதில் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் நம்முடைய மாகாணத்தில் கிராமங்களும் சந்தைகளும் ரெயில்வே ஸ்டேஷன்களிற்கு வெகுதூரங்களிற்கப்பால் இருக்கிறமையால் மேற்சொல்லிய மோடார்வண்டி ஏற்பாடு அதிக நன்மைகளை உண்டாக்கக்கூடியதென்றும். இந்த விவஸாய முறைப்பிரச்சார மோடார்வண்டி ஏற்பாடு சரிவர நடந்தால் கிராமாந்தரச்சுகாதார முன்னேற்றத்தின் பொருட்டு கிராமங்களில் பிரச்சாரம் நடைபெறுவதற்காக இன்னொரு மோடார்வண்டி ஏர்பாட்டைச்செய்ய உத்தேசித்திருக்கிறதாகவும் மொழிந்தார். கவர்மெண்டார் தவிர இதரஸ்தா

பனங்களும் நாளளவில், இவ்வித மோடார்வண்டி ஏற்பாடுகளை உண்டாக்கி நடத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மிராசுதார்களும் இதரர்களும் கவர்மெண்டுடன் இவ்வேற்பாடுகள் பயன்படுமாறு உடன்பட்டு உழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

Prevention of Tuberculosis in Children

[குழைந்தகளுக்கு க்ஷயரோகம் வருவதைத்தடுப்பதற்காக எடுத்துக்கொள்ளப் படவேண்டிய சில ஜாகிருதை முறைகள்]

க்ஷய ரோகமானது குழந்தைகளுக்கு அதிகமாக வருகிறதென்பது இன்னும் அநேகரால் தெரிந்துக்கொள்ளப்படவில்லை அநேக குழந்தைகள் இந்தக்கொடிய நோயால் இறந்துபோகின்றன. இந்நோய் குழந்தைகளுக்கு வரும்பொழுது அது சின்னம்மைபோன்ற செவ்வாப்புடன் வந்தால் அக்குழந்தைகள் பிழைக்கிறதில்லை. வேறுவித க்ஷயரோகங்கள் அவர்களுக்கு வந்தால் நோய்கள் போகும்பொழுது கெடுதியான அடையாளத்தை உடம்பில் உண்டாக்கிவிட்டுபோகின்றன. இவ்வடையாளங்கள் அநேகமாய் கழுத்தில் தொண்டைப் பக்கத்தில் வீக்கம், அல்லது மார்பில் வீக்கம், அல்லது எலும்பு பூட்டுநோய் இவைகளாக ஏற்படுகின்றன. க்ஷய ரோக சிகிச்சையானது அந்த ரோகம் நாள்பட்டிருந்த பின்பு அநுஷ்டிக்கப்பட்டால் பயன்படாது. அந்த ரோகம் (1) க்ஷயரோகமுள்ள பசுக்களின் பால் உட்கொள்ளப்படுவதாலும். (2) க்ஷய ரோகி ஜனங்களோடு சேர்க்கையினாலும் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடும். முதல் காரணத்தினால் ஏற்படும்நோய் வயற்றில் ஏற்படுகிறது, எலும்புகளையும் பூட்டுகளையும்கூட தாக்குகிறது. ஆகையால் பசுக்கள் க்ஷயரோகமில்லாதவைகளாக இருக்கின்றனவா வென்று கவனிக்கப்படவேண்டும். கறக்கிறவர்களும், அவைகளை ஓட்டுகிறவர்களும், தீனி வைக்கிறவர்களும் அவ்வாறே கவனிக்கப்படவேண்டும். மாட்டுக்கொட்டில்கள் வெகு சுத்தமாக வைக்கப்படவேண்டும். பால் கறக்கப்படும் பாத்திரங்கள் பரிசுத்தமாக இருக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும்பால் நன்றாய்க் காய்ந்திருக்கவேண்டும். அப்படிக் காய்வதால் பால்களாலிழக்கப்படும் வைடமின்களுக்குப் பதில் வைடமின்கள் ஆரஞ்சிபழத்தின் இரஸம் கொடுக்கப்பட்டால் அவ்வாரஞ்சு ரஸத்திலிருந்து நிரம்ப ஏற்படும். தக்காளிப்பழத்திலும்

ஆரஞ்சு நிறமுள்ள முள்ளங்கியிலும் வைட்டமின்கள் அதிகமாய் இருப்பதால் அவைகளின் ரஸங்களும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படக்கூடும். அந்நிய தேசங்களிலிருந்து வருகிற டின்பால்களும், டின்மாவுகளும் உபயோகப் படுத்தப்படவே கூடாது. க்ஷயரோகமுள்ள பெரியவர்கள் வீட்டிலிருந்தால் அவர்களிடத்தில் குழந்தைகள் போகக்கூடாது எப்பொழுதும் இருமிக்கொண்டிருக்கிற பெரியவர்களிடத்திலாவது சின்னவர்களிடத்திலாவது குழந்தைகள் போகக்கூடாது. அவர்கள் தாய் தந்தையர்களாக இருந்தாலும் சரி, குழந்தைகள் அவர்களிடத்தில் போகவேகூடாது. குழந்தைகள் நல்லகாத்திலும்வெய்யலுள்ளப் பிரதேசங்களிலும் இருக்கவேண்டும் வெய்யில் வெளிச்சமானது க்ஷயரோக நிவாரணி. வீடுகள் நல்ல காத்துள்ளவைகளாகவும் வெய்யல் படும்படியாக பெரிய முற்றங்களை யுடையவை களாகவுமிருக்கவேண்டும்.

How much Land Does Man require?
மனிதனுக்கு எவ்வளவு நிலம் வேண்டும்?

நமது தேசத்தில் ஜன சங்கியையில் முக்கால்பங்கு பயிர்த்தொழிலையே ஜீவனமாகக்கொண்டிருக்கிறது. ஜனத்தொகையோ அதிகரித்துக்கொண்டு வருகிறது, கைத்தொழில்களோ விருத்தியாகவில்லை, அந்நிய நாடுகளிற்கு ஜீவனத்திற்காக போகிற ஜனசங்கியையும் குறைக்கப்பட்டிருக்கிறது, பிரஜோத்பத்தியைத் தடுக்கும் முறைகள் அந்நிய தேசங்களில்போல அநுஸரிக்கப்படவில்லை. ஜனத்தொகை விருத்தியாகிற அளவில் உணவுப்பொருள்கள் அகப்படுகிறதில்லை. ஆகவே ஜனங்களின் சுகஸ்திதி மேலுக்கு மேல் க்ஷீணத்தையடைந்துகொண்டு வருகிறது. ஆகையால், மனிதன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் உணவுப் பொருள்களை விளைத்துக் கொள்ளவேண்டிய வகையில் எவ்வளவு நிலத்தை உடைத்தாயிருக்கவேண்டுமென்கிற விஷயம் ஆலோசிக்கப்படவேண்டியதாயிருக்கிறது. பஞ்சாப் மாஹாணத்திய கூட்டுறவு இலாகா ரிஜிஸ்டிராராகிய மிஸ்டர் எல். டார்லிங்கு இவ்விஷயத்தைக் கவனித்து ஆராய்ந்துபார்த்து இந்தியா கவர்ன்மெண்டின் வியவஸாய பத்திரிகையில் எழுதியிருக்கிறார். நமது தேசத்தைப்போன்ற தேசம் இத்தலி. 100-வருஷங்களுக்கு முன் அந்த தேசத்தில் பெரும்பாகம் ஏழ்மையானப் பிரதேசமாகவேயிருந்தது. பின்பு, வியவஸாயமுயற்சி

கள் ஓங்கியதால் அந்தப் பிரதேசத்தின் முக்கால்பங்கு சுபிக்ஷஸ்திதியை யடைந்திருக்கிறது. எந்தெந்த பாகங்களில் வியவஸாயம் தக்கபடி அநுஷ்டிக்கப்படுகிறதில்லையோ, அவைகள்தான் இன்னும் ஏழ்மை ஸ்திதியிலிருக்கின்றன. பயிர் வழிகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்படவேண்டும். ஒன்று அதிக நிலத்தில் அதிக வேலையின்றி நிலவளத்தைக்கொண்டே தானியத்தை விளைக்கிற வழி. பருப்புவகைகள் இவ்விதமாகத்தான் பயிர் செய்யப்படுகின்றன. மனிதனுக்கு சாப்பாட்டுக்கு முக்கியமாய் வேண்டியது பருப்பு. ஆகையால் அப்பயிரானது அதிக விஸ்தீர்ணமுள்ள நிலத்தில் நிலவளத்தையே நம்பி மனிதனுடைய வேலை அதிகமாய் உபயோகப்படுத்தப்படாமல் அநுஷ்டிக்கப்படுகிறது. இன்னொரு பயிர்வழியானது குறைவான விஸ்தீரணத்தில் அதிக லாபங்களைக் கொடுக்கக்கூடிய பயிர்களைச்செய்தல். இவ்விதப் பயிர்கள் காய்கறி, பழங்கள், வியாபார வஸ்துக்கள். இவ்வகைப் பயிர்களுக்கு மனிதனுடையமுயற்சியும், கெமிஸ்டிரி, பையாலஜி முதலிய சாஸ்திரவழி முறைகளும், மனிதனுடைய புத்தியும் மூலதனமும் வேண்டும். வியாபாரப் பொருள் சாகுபடிக்கு ஒரு மனிதனுக்கு 2½ எக்கர்கள் போதுமாம், பழவர்க்கப்பயிருக்கு 4 ஏகர் வேண்டுமாம்; பருப்புதினுசுகளை விளைக்கப்படும் விஷயத்தில் 12½ ஏகர்கள் வேண்டுமாம். இந்த அளவுகள் சற்றேறக்குறைய சரியான திட்டங்களாகவே இருக்கக்கூடும்.

பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள்.

நமது தேச ஜனங்களின் சுகவாழ்வை உயர்த்த வேண்டியதற்கு அவசியமான முயற்சிகள் கிராமச் சீரமைப்பு முயற்சிகள். பண்டைக் காலத்தில் கிராமங்கள் ஐக்கியமுறைகளை யநுஷ்டித்து ஆத்மாவை யுடைத்தானவைகளாகவே வாழ்ந்து வந்தன. ஜாதி வகுப்புகள் தொழில்களின் நிமித்தம் உண்டானவைகளே யொழிய வேறு எக்காரணத்தினாலும் உண்டாகவே யில்லை. ஒவ்வொரு ஜாதியும் அதற்கென்ற ஒவ்வொரு தொழிலை தலைமுறைத் தலைமுறையாக அப்பியஸித்தமையால் அந்தந்தத் தொழில் திறமையுடனும் மேலுக்குமேல் புத்தியுக்தியுடனும் அப்பியஸிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு ஜாதியாரும் அவர் அவர் தொழில்களைச் செய்து ஜீவனஞ்செய்து வந்தார்கள். கிராமமானது கல்பக விருக்ஷம்போல் ஏற்பட்டு எல்லா ஜாதிகளையும் தன்னுடைய அங்கங்களாகவே வஹித்து, ரக்ஷித்து ஓங்கியிருந்தது. ஜாதிகளும், கிராமமாகிய கல்பக விருக்ஷத்தின் அங்கங்க

ளென்ற உணர்ச்சியுடனிருந்துகொண்டு அவ்விருக்ஷத்தின் க்ஷேமமும் தங்களுடைய க்ஷேமமும் ஒன்றேதான் என்பதை யறிந்து வாழ்ந்தன. ஒவ்வொரு ஜாதியும் இதர ஜாதிகளின் க்ஷேமத்தை நாடியே வசித்தது. கிராமமானது தன்னுடைய முயற்சிகளில் எல்லா ஜாதியாரையும் தங்கபடி சேர்த்துக்கொண்டு அவைகளுக்கு ஜீவனங்களைக் கொடுத்துக்கொண்டு அவைகளை சுகசௌக்கிய நிலையில் அமைத்துக்கொண் டிருந்தது. இப்படி அங்கங்களாக அமைந்து நடந்துகொண்டிருந்த ஜாதிகள் கிராமச்செல்வ நிலையை யுயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. தவிரவும், பிரதி நபரும் தன்னைச் சமூகத்தின் அங்கமாகவே பாவித்துக்கொண்டு சமூக வாழ்வின் க்ஷேமத்தைக் கருதியே வசித்தான். சமூகமானது கிராம நிர்வாஹத்தை வெகு சீராக நடத்தி வந்தது. போலீஸ், நியாயம், வரி வசூல், மராமத்து, நீர்ப்பாசனம், தேவஸ்தானம் இவைகளின் நிமித்தம் பிரத்தியேக நிர்வாஹ உள் சபைகளிருந்து வியவஹரித்தன. இப்படி கிராமத்தில் ஜாதிகள் பொதுச் சமூக க்ஷேமத்தையும் பரஸ்பர க்ஷேமத்தையும் நாடியதற்குக் காரணம் அவைகள் கிராமச் சமூகத்தை தெய்வமாகப் பாவித்து நடந்துநடந்துவந்ததுதான். இந்த உணர்ச்சியால்தான் கிராமத்தில் பல வழிகளில் ஐக்கிய முறைகள் அநுஷ்டிக்கப்பட்டு வந்தன. அப்படி ஐக்கிய முறைகள் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருந்தமையால்தான் கிராமம் தன்னுடையஜனங்களிற்கு சுகமான வாழ்வை நடத்தியதுடன் தேசச் செல்வ விருத்தியையும் நடத்தியது கடவுளிடத்தில் நம்பிக்கையும், அவர் நம்முடைய எண்ணங்களையும் நடத்தைகளையும் நம்முடைய எதிரிலேயே பார்த்துக்கொண்டு வருகிறாரென்கிற உணர்ச்சியும், எல்லா ஜாதியாரும் ஒரே கடவுளுடைய குழந்தைகள் என்கிற உணர்ச்சியும் தான் மேற்சொல்லிய கிராம ஏற்பாட்டிற்கு ஆதாரங்களாக வாய்ந்தன.

ஆங்கிலேயர்களுடைய ஆக்ஷி வந்ததுமுதல் மேற்சொன்ன கிராம ஏற்பாட்டிற்கும், முறைகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் கேடுதி ஏற்பட்டது. படிப்படியாக ஜனங்கள் கடவுளின் நம்பிக்கையே இழந்துவிட்டார்கள். அப்படி அவர்கள் கடவுளின் நம்பிக்கையையே இழந்துவிட்டமையால்தான் அவர்கள் கடவுள் சுவரூபமான கிராம சமூக ஏற்பாட்டையும் அலக்ஷியஞ் செய்து அவைகளில் சீர் கேடுகளை யுண்டாக்கி கடைசியாக அவைகளையே இழந்தார்கள். ஆத்ம ஸ்வரூபத்தை

வஹித்த கிராம ஸமூகம் நசித்தமையால் கிராமமே உயிரில்லாமலும் பாழான நிலமையிலும், தரித்திரத்திலும் அமைந்து விட்டது,

கிராமம் பண்டைகாலத்தில் போல் அமைந்து முயற்சிகளை நடத்தினால் தான் தேசத்தின் தரித்திர நிலை யொழியு மென்கிற விஷயத்தை உணர்ந்து கிராமப்புனருத்தாரண இயக்கம் ஏற்பட்டு முயற்சிசெய்து வருகிறது. அவ்வியக்கத்தைச் சேர்ந்தது நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்து இயக்கம். கிராமப்புனருத்தாரணத்திற்கு முக்கியமாக வேண்டியவை:—ஸமுதாய வாழ்வு, ஐக்கிய முறைகள், கிராமச் சுகாதாரச் சீர் முறைகள், ஆடுமாடு விருத்திமுறைகள், கிராமாந்தரக் கல்விமுறை, வியவஸாயச் சீர்முறைகள், கைத்தொழில் அபிவிருத்தி. ஆடு மாடுகள், மேய்வதற்கும் தங்குவதற்கும், விவஸாயத்திற்கு எருத்தழைகளின் நிமித்தமும் கிராமச் சுகாதார நிலைச்சரியாக அமைவதற்காகவும், கிராம ஜனங்களுக்கு வேண்டிய விறகின்நிமித்தமாகவும் கிராமக்காடுகள் அவசியமானவை. மேலும் இவைகள் திறமையுடன் நிர்வஹிக்கப்பட்டால் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் சர்க்காருக்கு க்குத்தகைப் பணத்தைக் கட்டி இதரச் சிலவுகளை நடத்தியபின் வசூலித்த பணத்திலிருந்து மிச்சத்தை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு விருத்திசெய்யக்கூடும் அந்த நிதி பஞ்சாயத்துக்காடுகளின் நிமித்தம் பலவித முயற்சிகளுக்கும், குளம், குட்டைகள் வெட்டப்பட வேண்டிய நிமித்தமாகவும், நாகதாளிகளைய ழிப்பதற்காகவும், கிராமாந்தரப்புனருத்தாரண நிமித்தச்சிலவுகளுக்கும் உபயோகப்படக் கூடும். இப்படிப்பட்ட பல உத்தேசங்களுடன் தான் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுடைய மாஹாண யூனியன் ஸ்தாபிக்கப் பட்டது. மாஹாண யூனியனேற் படுத்தப்பட்ட பொழுது, ஜில்லா யூனியன்கள் அத்தன்மையாக ஜில்லாக்களில் ஏற்பட்டு மேற்கூறிய வழிகளைக் கைப்பற்ற வேண்டுமென்று கோறப்பட்டது. மாஹாண யூனியன் மாத்திரம் வேலை செய்தால் ஒரு பயனும் ஏற்படா தென்பதை பஞ்சாயத்தார்கள் நன்றாக அறிய வேண்டும். ஜில்லாக்களிலுள்ள பஞ்சாயத்துகள் இடை விடாமல் மீடிங்கு கூடி கிராமக் காடுகளின் விஷயங்களிலும் கிராமப் புனருத்தாரண வழிகளிலும் கவனத்தைச் செலுத்தி வாதித்து கிராமத்தார்களுக்குப் போதித்து அவைகள் ஜில்லா யூனியன்களாகவும் அமைந்து மேற்படி முயற்சிகளைச் செய்யவும் வேண்டும். பஞ்சாயத்தாரகளுள் விவேகமும் அநுபவமும் வாய்ந்து கிராமச் சீரமைப்பு துறைகளில் நிருபணங்க

ளைக் காட்டிப் போதனைகளைச் செய்ய சக்தியுள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. இவர்கள் கிராம ஜனங்களின் அவிவேகத்தையும் சீர் கேடுகளையும் தரித்திரத்தையும் ஒழித்து அவர்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்த முயல வேண்டும். ஐர்லாண்டின் தரித்திர நிலை எப்படி சிறந்த தேசாபிமானிகளால் ஒழிக்கப்பட்டதென்றும், டென்மார்க்கில் இடைவிடாத கல்வி முயர்ச்சிகளால் எப்படி ஜனங்கள் விவேகத்தையடைந்து ஐக்கிய முறைகளைக் கைப்பற்றினார்களென்றும், ஐக்கிய நாடுகளில் தேசாபிமானியான புகர்வாஷிங்டன் என்பவரால் கிராம முன்னேற்ற முறைகள் பிரயாணப்பள்ளிக்கூட ஏற்பாட்டின் மூலமாக எப்படி கிராமங்களில் போதிக்கப்பட்டனவென்றும் நமது பத்திரிகையின் சஞ்சிகைகளில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்தார்கள் அவ்வியாஸங்களை வாசித்திருப்பார்களென்று நம்புகிறோம். அவர்கள் படித்திராவிடின், உடனே அவைகளைப்படித்து அவைகளில் விவரிக்கப்பட்ட தேச சேவைகளைப்போன்ற தேச சேவைகளை அவர்கள் இடைவிடாமல் அநுஷ்டிப்பார்களாக.

A movable School that is moving a People.

ஜனங்களுக்கு பலதுறைகளிலும் சீர்முறைகளை உபதேசிக்கிற சுற்றுப் பிரயாணங்கள் செய்யும் பள்ளிக்கூடம்.

[இது மைசூர் ஸர்வ கலாசாலையில் போதகராக விருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஜீ. எஸ். கிருஷ்ணய்யா பி. ஏ, (ஆனர்ஸ்) எம். ஏ., பீ. எச்சு. டி. (கொலம்பியா) அவர்களால் எழுதப்பட்டது.]

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த அலபாமாவில் டஸ்கஜி ஸ்தாபனத்தைச் சேர்ந்த, பிரயாணம் செய்து போதனைகளைச் செய்கிற ஒரு பள்ளிக்கூடமிருக்கிறது, 30-வருஷங்களிற்கு முன்னே புகர்வாஷிங்டன் என்பவர் டஸ்கஜி ஸ்தாபனத்தின் தலைவராகவிருந்தார். ஸ்தாபனமிருக்கிற பிரதேசத்தில் பல வெள்ளையரல்லாத ஜாதியார்கள் தங்களுடைய நிலங்களிலிருந்து அல்ப வரும்படிகளையடைந்துகொண்டு கஷ்ட ஜீவனத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். இவர்கள் நல்லஸ்திதிக்கு வரவேண்டுமென்று நோக்கங்கொண்டு புகர்வாஷிங்டன் அதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தார். முதல் முதலிலே, இந்த ஏழைக் குடியானவர்களைக் கூட்டி அடிக்கடி சம்பாஷணைகளையும் உபந்நியாஸங்களையும் நடத்திவந்தார். இந்த

மீடிங்குகளின் சந்தர்ப்பங்களில் பயிர்களிலும், பயிர் முறைகளிலும் நிரூபணக்காக்ஷிகளையும் நடத்தி வந்தார். இம்முயற்சிகள் பயன்பட ஆரம்பித்ததைக் கண்டு அவர் இவ்வித ஊழியம் தேசம் முழுவதும் நடைபெறுமாறு நோக்கங்கொண்டு வலுத்த முயற்சிகளை விடாமல் செய்ய உத்தேசித்தார். ஆகவே, காக்ஷி வஸ்துக்களையும், நிரூபண வஸ்துக்களையும், ஊர் ஊராய்க் கொண்டு போய் போதனைகளை நடத்துவதற்காக ஒரு பெரிய வண்டியை வாங்குவதற்காக ஒரு தனவானிடத்திலிருந்து பணத்தையடைந்தார்.

ஒரு பெரிய வண்டியானது வாங்கப்பட்டது. அதில் பயிர்த்தொழிலிற்கு வேண்டிய கருவிகளும், தான்யங்கள் நிறைந்த பெரிய கூடைகளும் அமைக்கப்பட்டன. இந்த வண்டியானது ஒரு வியவஸாய நிரூபண உத்தியோகஸ்தனுடைய வசத்தில் ஒப்பிவிக்கப்பட்டது. அந்த உத்தியோகஸ்தன் அதை அக்கம் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கு கொண்டுபோய் நீக்ரோ குடியானவர்களுக்கு பயிரிடுவதில் சீர் முறைகளையும், கஷ்டமில்லாமல் ஜீவிக்கிறதற்குக் கைக்கொள்ளவேண்டிய முயற்சிகளையும் உபதேசித்தார்.

இந்த வண்டி யேற்பாட்டால் குடியானவர்கள் சீர் முறைகளைக் கைப்பற்றி சுகத்தையடைய ஆரம்பித்ததைக்கண்டு ஐக்கிய நாடுகளின் கவர்ன்மெண்டின் கூட்டுறவு வியவஸாய இலாகாவானது இவ்வேற்பாட்டை இராஜாங்க ஏற்பாடாகக் கைக்கொண்டு சாதாரண வண்டிக்குப்பதிலாக நீராவி விசை வண்டியை உபயோகிக்கத் தொடங்கிற்று.

குடியானவர்களின் ஏழ்மை ஸ்திதியைப் பார்த்துத் துயரப்பட்டு போதனை முறையை யுண்டாக்கி அரியபெரிய தேச சேவையைச் செய்த தேசாபிமானியாகிய புகர் வாஷிங்டனின் ஞாபகார்த்தமாக டஸ்கஜி ஸ்தாபனத்தின் நீக்ரோ குடியானவர்களுடைய 1923-ம்வருஷக் கொண்டாட்ட தினத்தில் 30,000 நீக்ரோ ஜனங்கள் பணம் போட்டு "புகர் வாஷிங்டன் ஸ்கூல் ஆன் வீல்சு" என்கிற வண்டியைத் தயாரித்து பிரச்சாரத்திற்காகக் கொடுத்தார்கள். படிப்பில்லாமையிலும் அவிவேகத்திலுமிருக்கிற கிராமாந்தர ஜனங்களுக்குப் போதனைகளைச் செய்வதற்கு பிரச்சாரர்கள் இவ்வண்டியை உபயோகித்து பல விடங்களிற்குச்சென்று நிரூபணங்களையும், காக்ஷிகளையும் காட்டி சீர் முறைகளை அவர்கள் கைக்கொள்ளுமாறு முயற்சிகளைச் செய்கிறார்கள். பிரயாணப் பள்ளிக்கூடமானது உபந்நியாஸங்களைச்

செய்கிறதில்லை. அது நிரூபணங்களைக்காட்டுகிறது. போதகர்களின் முன்பாக நீக்ரோக் குடியானவர்கள் வேலைகளைச் செய்கிறார்கள். போதகர்கள் அவர்கள் செய்யும் வேலைகளைப் பார்த்துக்கொண்டு அப்போதைக் கப்போதுப் போதிக்கிறார்கள். பிரயாணப் பள்ளிக்கூடமானது ஒரு ஊரை அடைந்தவுடன், போதனைகளை நடத்துவதற்காக அவ்வூரில் அதிக கேவல ஸ்திதியிலிருக்கின்ற ஒரு குடும்பத்தாரின் வீட்டில் தங்கி போதனைகளையும் நிரூபணங்களையும் செய்கிறது. பிரயாணப் பள்ளிக்கூட வண்டியில் பயிர் வேலைக்கு வேண்டிய கருவிகளும், வீட்டுச் சௌகரியங்களுக்கு வேண்டிய அம்சங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. குடியானவர்கள் தேவையானவைகளை அப்பள்ளிக்கூடத்திலிருந்து வாங்கிக்கொள்ளவும் கூடும். அதில் ஒரு போனகிராப்பும், விளக்கு ஏற்பாடும், சினிமாகாக்ஷி ஏற்பாடும் அமைந்திருக்கின்றன. அதில் மூன்று போதகர்கள் வேலை செய்கிறார்கள். அதாவது, பயிர் முறைகளைப்பற்றியும் அதற்குவேண்டிய கருவிகளைப்பற்றியும் போதனைகளைச் செய்வதற்காக ஒரு மனிதனும், வீடுகளில் சீராகவும், செட்டாகவும் குடித்தனங்களை சௌக்கியங்களுடனும், நோயில்லாமலும் நடத்துவதற்கு நிரூபணங்களைச் செய்து காட்ட ஒரு பெண்பிள்ளையுடனும், சுகாதார போதனைகளையும் வீடுகளை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டிய வழிகளும் வீட்டில் நோயாளிகளைக் கவனிக்கவேண்டிய வழிகளிலும் போதனைகளைச் செய்வதற்காக ஒரு நர்ஸும் வேலை செய்கிறார்கள்.

பிரயாணப் பள்ளிக்கூடமானது வருஷம் முழுவதும் தான் சுற்றுப் பிரயாணஞ்செய்து போதனைகளை நடத்துவதற்காக எந்தெந்த ஊர்களுக்குப்போவதாக உத்தேசிக்கிறதோ அவ்வூர்கள், அவைகளில் தங்கவேண்டிய நாள்கள், அவைகளிற் செய்யவேணடிய வேலைகள், இவைகளின் சம்பந்தமாக வருஷஆரம்பத்திலேயே ஒரு ஜாப்தாவைத் தயாரித்துக்கொண்டு அதன்படி நடக்கிறது. கிராமங்களிலிருக்கிற நீக்ரோ ஜனங்களின் எஜண்டு அந்தப்பள்ளிக்கூடம் அவ்வூருக்குவர வேண்டிய காலத்தில் அதற்குச் சௌகரியங்களையேற்படுத்தி அது போதனைகளையும் நிரூபணங்களையும் செய்யவேண்டியதற்காக ஒரு தக்க பயிர் நிலத்தை அமைத்து திறளான நீக்ரோக்குடும்பங்களை அதில் கூட்டிவைத்துக்கொள்வான். பிரயாணப் பள்ளிக்கூடம் வருகிறதேதியும், அது எந்த பயிர் நிலத்தில் நிரூபணங்களை நடத்தப்போகிறதோ அதைப்பற்றியும்

முன்னதாகவே துண்டுப்பிரசுரங்கள் ஜனங்களுக்கு அறிக்கை செய்கின்றன. பள்ளிக்கூடம் கிராமத்தில் வந்து இடத்தில் அமைக்கப்பட்ட பின்பு கூட்டப்பட்டிருக்கும் நீக்ரோஜனங்கள் வகுப்புகளாக பிறிக்கப்பட்டுப்போதனைகளை யடைகிறார்கள். பயிர் முறைகளின் சம்பந்தமாகவும், சுகாதார முறைகளின் சம்பந்தமாகவும் குடும்ப சௌக்கிய விஷயமாகவும, கோழிவளர்ப்பு சம்பந்தமாகவும், மாட்டு சவரக்ஷணை சம்பந்தமாகவும் போதனைகள் நடத்தப்படுகின்றன.

வண்டியில் பிரயாணஞ்செய்து போதனைகளை நடத்துகிற மூவரில் பயிர் நிலத்தில் ஆண்பிள்ளையான போதகர் ஆண்பிள்ளைகளுக்குப் போதனைகளை நடத்துகிறார். போதகருக்கு எதிரிலே ஆண்பிள்ளைக் குடியானவர்கள் அவருடைய போதனைகளை யநுஸரித்து பள்ளிக்கூடம் தங்கியிருக்கிற வீட்டையும் அதைச் சார்ந்த நிலங்களையும் ஒழுங்கு பண்ணுவதிலும் ரிபேர் செய்வதிலும் அமைகிறார்கள். மேடுகள், கோழிக்கூடுகள், சுகாதார வழியில் ஸ்நாந இடங்கள். இவைகளெல்லாம் அவர்களால் கட்டப்படுகின்றன. தோட்ட வேலைகளும் அவர்களால் செய்யப்படுகின்றன.

வீட்டிற்குள்ளே குடியானவப் பெண்பிள்ளைகள் ஒவ்வொரு வகுப்பு வேலைக்கும் தனித்தனிக் கூட்டங்களாக அமைந்து சுவர்கள், தரை, மேஜை முதலியனவற்றைத் தேய்த்துக்கொண்டும், அலம்பிக்கொண்டும் சுத்தப்படுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். பள்ளிக்கூடம அவ்விடத்தைவிட்டுப் பிரயாணப்பட்ட பின்பு வீடு புது வீடு மாதிரி ஆகிவிடும். பழய துணிக் கந்தைகளைத் தோய்த்து உணர்த்தி அவைகளை யுபயோகித்து மெத்தைகளையும் பாய்களையும் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு தையல் வேலையும் கற்பிக்கப்படுகிறது, கோழிவளர்ப்புவிஷயம் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் கற்பிக்கப்படுகின்றது.

பிரயாணப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த நர்ஸானவள் ஒவ்வொரு வகுப்பினங்களின் வீடுகளைப் போய்ப்பார்த்துக் கவனித்து அவ்வீடுகளில் வஸிப்பவர்களுக்கு வீட்டுச் சுகாதார விஷயங்களிலும், சிசுரக்ஷண விஷயங்களிலும் போதனைகளைச் செய்கிறாள். மேலும், அவ்வீடுகளில் நோயாளிகளிருந்தால், அவ்வூர்வைத்தியர்களிடம் அவர்களை சிகித்ஸைக்கு ஒப்பிவிக்கிறாள். வியாதியஸ்தர்களுக்கு மருந்துகள், உணவுகள் சரியானபடி கொடுக்கவேண்டிய விஷயத்திலும், அவர்களைத் தக்கபடி கவனிக்கவேண்டிய விஷயத்திலும் வீட்டில் வஸிப்பவர்களுக்குப் போதனைகளைச் செய்கிறாள்.

பிரயாணப் பள்ளிக்கூடம் குடியானவர்களுக்கு விளையாட்டுகள், விநோதங்கள் இவைகளை யநுஷ்டிக்கிற வழிகளிலும் போதனைகளை நடத்துகிறது. மத்தியானத்தில் குடியானவர் எல்லோரும் ஒன்று கூட்டப்பட்டு விளையாட்டு விவரங்களில் போதிக்கப்படுகிறார்கள். விளையாட்டுகளும், விநோதங்களும் கிராமாந்தர ஜனங்களுக்குத் தேகப்பயிற்சியின் நிமித்தமாகவும், கஷ்டவேலைகளநுஷ்டிக்கப்பட்ட பின்பு விநோதார்த்தமாகவும் வெகு முக்கியமானது.

ஒரு வெள்ளைக்கார கனவான் மேற்சொல்லிய பிரயாண வண்டிப் பள்ளிக்கூடமானது ஒரு கிராமத்திற்குச் சென்று போதனைகளைச்செய்துத் திரும்பிய பின்பு அந்தக் கிராமம் எத்தன்மையாக ஆகிவிட்டதென்பதை பின் வருமாறு வரைகிறார்:—"இந்தப் பள்ளிக்கூடம் நான்கு நாள்கள் வரையில் இருந்த பின்பு இந்த கிராமமே புதிதாக ஆகிவிட்டது. பள்ளிக்கூட மமைக்கப்பட்டிருந்த வீடு நன்றாகச் சுண்ணாம்படிக்கப்பட்டிருந்தது. முற்றத்தில் புஷ்பச் செடிகள் ஒழுங்காக வைக்கப்பட்டு நடை வழிகள் சரிவர ஏற்படுத்தப்பட்டிருந்தன. பன்றிக் கொட்டில்கள் கிணற்றுப்பக்கத்திலிருந்து எடுத்துவிடப்பட்டுவேறே தூரமான இடத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. கிணற்றிற்குச் சுற்றுச் சுவர் உயரமாக எழுப்பப்பட்டு சுண்ணாம்படிக்கப்பட்டிருந்தது. குடியானவர்கள் தோட்டத்தை வைத்துக்கொள்ளுகிற வழிகளிலும், வெண்ணெ, பால் வஸ்துக்கள் இவைகளைத்தயாரிக்கிற வழிகளிலும், வீடுகளிற்கு மண்ணிடுகிற வழிகளிலும், மாடு வைத்துக்கொள்ளுகிற வழிகளிலும், சமையல் செய்கிற வழிகளிலும், ஸோப்பு செய்கிற வழிகளிலும், கூடை முடைகிற வழிகளிலும், போதனை யடைந்திருந்தார்கள். அநேக குடிகளும் குடித்தனங்களும் இந்தப் பிரயாணப் பள்ளிக்கூடத்தில் போதனைகளினால் எல்லா வழிகளிலும் நேரும் சீருமாக அமைந்தன."

ஒரு மாதம் வரையில் இந்தப் பள்ளிக்கூடம் ஒரு கிராமத்தில் நிரூபணங்களையும போதனைகளையும் நடத்தியதில் 4 "கோழி வளர்ப்புப் பட்டிகளும், 12 வாசப்படி வரிசைகளும், அமைக்கப்பட்டன. படுதாக்கள், 28 ஜென்னல்களுக்கும் கதவு நிலைகளுக்கும் போடப்பட்டன, 150 குடியானவர்கள் சாகுபடி நிலத்தை ஸபப்படுகிறவழியில் போதனைகளை யடைந்தார்கள். 120 ஜமக்காளங்களும், பாய்களும் செய்யப்பட்டன, 48 சுகாதார போதனைகளுக்கான நிரூபணங்கள் நடத்தப்பட்டன. பெண்பிள்ளைகள், குழந்தைகளுள்பட 540 பெயர்கள் சாகுபடி நிலங்களை சீராகவைத்துக்கொள்ள வேண்டிய வழிகளில் போதிக்கப்பட்டார்கள்.

இவ்விதப்போதனைகள் குடியானவர்களுள் வீடுகளைச்சீராக வைத்துக்கொள்ள வேண்டிய வழிகளும், சாகுபடி நிலங்களைத்தக்கபடி பயிர் செய்வதிலும் ஆசையைப்பூட்டுகின்றன. சொந்த நிலத்தை யுடைத்தாயிராத குடியானவனுக்குக்கூடச் சொந்த நிலத்தைச்சம்பாதித்துக்கொண்டு சாகுபடி முயர்ச்சிகளை நடத்தும்படியும் அவைகள் தூண்டுகின்றன. பெண்பிள்ளைகள் வீடுகளைச்சீராகவும் சுகாதாரக்குறைவில்லாமலும் வைத்துக்கொள்ள வேண்டிய வழிகளிலும், யோகக்ஷேமங்களைச்செட்டாகவும் ஒழுங்காகவும் நடத்தவேண்டிய வழிகளிலும், தூண்டப்படுகிறார்கள்.

ஐக்கியநாடுகளின் கல்விவிஷயநிர்வாஹஸபையின் சபாத்தியரான டாக்டர் வாலேஸ்பட்ரிக் என்பவர் பிரயாணப்பள்ளிக்கூடமுறைவழியானது உலகத்திலெங்கேயும் அனுஷ்டிக்கப்படுகிற கல்விவழிகளிலெல்லாம் மிகுந்த பயனுள்ளவழியாக அமைந்திருக்கிறதென்று மொழிந்திருக்கிறார். பிரயாணப்பள்ளிக்கூட முறையை யறிந்தவர்

கள் எல்லோரும் அப்படியே கூறுவார்களென்பதில் சந்தேகமேயில்லை.

சீனதேசத்து விவசாயிகளும் அவர்கள் எரு சேகரிக்கும் முறையும்

இந்தியாவிலிருக்கும் கிருஷிகர் சீனதேசத்து விவசாயிகளிடமிருந்தும் ஜப்பான் தேசத்து விவசாயிகளிடமிருந்தும் எருகுப்பை சேகரிக்கல் விஷயத்தில் மெத்தவும் கற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

நமது தேசத்தைவிட சீன தேசத்தில் ஜனசங்கை ஜாஸ்தியாயிருந்தும் அங்குள்ள நிலங்களுக்கு அவ்விடத்து விவசாயிகள் ஒரு வண்டி செயற்கை எருகூட வாங்கி உபயோகிக்காமல் சென்ற 40 நூற்றாண்டுகளாகத் தங்களுடைய நிலத்தின் வளத்தையும் சத்தையும் கெட்டுப் போகாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எப்படி சாத்தியமாகுமென்று அனேகர் சந்தேகிக்கலாம். அப்படிச் சந்தேகப்படக் காரணமில்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் குப்பைகளைச் சேகரித்து நிலங்களுக்கு உபயோகிப்பதில் மெத்த சிரத்தையாயும் புத்திசாலித்தனமாயும் தங்களுடைய ஊர்களிலுள்ள எருக்களைச் சேகரித்து உபயோகிப்பதிலும், தாவரவர்க்க அதாவது இந்திரியவஸ்துக்களடங்கிய செடி கொடி குப்பை இவைகளைப் போன்ற வஸ்துக்களை சரியானபடி சேகரித்துப் பாது காத்து உபயோகிப்பதிலும் மனிதருடைய மலஜலங்களை அவம் போகாமல் சரியானபடி சேகரித்து அதில் எருத்தயாரித்து உபயோகிப்பதிலும் சமர்த்தர்கள். ஆகையால்தான் சென்ற 4000 வருஷங்களாகத் தங்கள் நிலத்திற்கு வேறு விதமான செயற்கை எருக்களை வாங்கி உபயோகிக்காமல் தங்களுடைய நிலங்கள் சரியானபடி மாசூல் கொடுத்துத் தங்களுக்கு வேண்டும் விளை பொருள்களை உண்டாக்கிக் கொள்வதுடன் நிலத்தின் வளத்தையும் கெட்டுப்போகாதபடி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சீன தேசத்து கிருஷிகர் மனிதர்களின் மலமூத்திரங்களிலிருந்து சேகரிக்கும் எரு வஸ்து சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்கள் எம்மாதிரி செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்களோ அம்மாதிரி செய்து உபயோகப்படுத்துகிறார்கள். அந்த விவசாயிகளிடம் இந்த மாதிரி ஏன் செய்கிறீர்களென்று யாராவது கேட்டால் அதன் காரணம் சாஸ்திர சம்மதமாய் அவர்களுக்குச் சொல்லவும் விவரிக்கவும் தெரியாது; என்றாலும் வழக்கத்தின் மூலமாயும் அனுபோகத்தின் மூலமாயும் சென்ற 4000 வருஷங்களாக சீனதேசத்து விவசாயிகள் மெத்த விலை உயர்ந்ததும் உபகாரமுள்ளதுமான எருவை அவம் போக்காமல் சேகரித்து உபயோகித்து தக்க பலன் அடைந்து கொண்டு வருகிறார்கள்.

மனிதனால் கழிக்கப்படும் மலமூத்திரம் இந்திரிய வஸ்து எருவானாலும் அவைகள் மண்ணுடன் கலக்கப்பட்டு சரியானபடி அந்நிலம் உழுது சோத்திப் பருவப்படுத்தப்பட்டு எருவும் மண்ணும் கலந்துபோன மாத்திரத்தில் மண்ணில் சதாகாலம் ஈஸ்வரனால்

சிருஷ்டிக்கப்பட்டு நமது கண்ணுக்குப் புலப்படாமல் வளர்ந்து கொண்டிருக்கும் சிற்றுயிர்களென்று சொல்லப்படும் அணுக்கிருமிகளானது தங்களுடைய வேலையைச் செய்யும்போது அந்த வஸ்துவிலிருக்கும் துர்க்கந்தமும் வாசனையும் நிவர்த்திக்கப்பட்டு துர்வாசனையில்லாத வஸ்துவாய் மாற்றப்படுகிறது. இவ்விந்திரிய வஸ்துக்களடங்கிய உரங்களிலிருக்கும் பயிர்களுக்கு உடனே உபயோகப் படக்கூடாத ஸ்திதியிலிருக்கும் தழைச்சத்துவென்று சொல்லப்படும் நைட்ரஜன் சத்துவானது சுலபமாய் கரைந்து செடிகளால் அருந்தக் கூடிய விதமான தழை சத்தாய் அதாவது நைட்டிரேட்டாய் இந்த அணுக்கிருமிகளின் வேலையால் மாற்றப்படுகிறது. இப்படி மாற்றப் பட்டவுடன் இவ்வெருவானது ஒரு சிவந்த கருப்பு நிறமுள்ள எருவாய் மாற்றப்பட்டு அதற்கு ஆங்கிலத்தில் ஹியூமஸ் என்று பெயர் வழங்குகிறது. இக்கரு நிறமுள்ள இந்திரிய வஸ்துவின் உபயோகத்தைக் குறித்து நமது சஞ்சிகையில் அனேக சந்தர்ப்பங்களில் நாம் வெளியிட்டிருக்கிறோம்.

சீன தேசத்தார் மனிதர்களுடைய மலமூத்திரங்களை மண்ஜாடிகளைப் போலொத்த பெரிய மண் பாத்திரங்களில் சேகரித்து வைத்து கெட்டியாயிருக்கும் வஸ்து இழகி தண்ணீர் பருவமாகும்வரை பார்த்திருந்து அத்தருணத்தில் அத்தண்ணீரை எந்தச் செடிக்கு உபயோகப்படுத்த வெண்டுமோ அந்தச் செடிக்கு அதை உபயோகிக்கிறார்கள். இப்படி உபயோகிக்கும் தனி மூடு ஒவ்வொன்றுக்கும் கொஞ்சம் உபயோகித்து அப்பால் அந்த மூட்டைச் சுற்றியிருக்கும் மண்ணை சரியானபடி கொத்திக்கிளறி அம்மண்ணில் காற்று சுலபமாய் புகும்படியும் அம்மண்ணிலுள்ள சிற்றுயிர்களாகிய அணுக்கிருமிகள் அதை எரு பதார்த்தமாக வேலை செய்து அதை சுலபமாய் பயிருக்கு உபயோகிக்கும் வண்ணம் மாற்றவும் எதுவாகும்படி செய்கிறார்கள். இமமாதிரி எரு விடுதல் காய்கறி வகைகள் பயிர்களுக்கு செய்யப்படுகிறது. இந்த விதமாய் பயிரிடுவதில் அவர்கள் வெகுசமர்த்தர்கள். அவர்களைப்போல் மற்ற எந்த இடத்திலும் இப்பயிர்களில் இலாபம் சம்பாத்தியம் செய்கிறதில்லை. மற்றப்பயிர்களுக்கு அதாவது புஞ்சை நஞ்சைகளுக்கும் மனிதர் மலமூத்திரங்களைச் சேகரித்து கூரை போட்ட இடங்களில் காய்ந்த பருவத்தில் வைத்திருந்து அப்பால் அதைப் பொடியாக்கி உபயோகப் படுத்துகிறார்கள்.

சீனாவைச்சேர்ந்த ஷாங்காய் பட்டணத்தில் மாத்திரம் மனிதர்களின் மலமூத்திரங்களை வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தக் குத்தகையெடுக்கும் கண்டிராக்டர் வருஷா வருஷம் ஆறு லட்சம் ரூ. கொடுக்கிறார்கள். இந்த விஷயத்திலிருந்து இந்த எருவுக்கு சீன தேசத்தார் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களென்று நாம் தெரிந்து கொள்ளலாம். இந்தத் தொகையைக் கொடுத்து விட்டு கண்டிராக்ட் எடுத்தவர்களே அந்த எருவை ஜனங்களுடைய வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தும் செலவையும் தாங்களே பொறுப்பதால் அந்தப் பட்டணத்துக் குப்பைகளைவாரி சுத்தமாய் வைத்திருக்கவேண்டிய விஷயத்தில் ஏற்படும் செலவும் அவர்களுக்கில்லாமல் போகிறது.

ஷாங்காய் பட்டணத்தில் வசிக்கும் ஆள் ஒன்றுக்கு சராசரியில் ரூ இரண்டு இந்த எருவிலிருந்து கிடைக்கிறது. இவ்விலை அந்த எருவில் அடங்கியிருக்கும் தழை சத்தை உத்தேசித்து ஒரு கணக் கெடுத்து மதிப்பிடப்பட்டிருக்கிறது, இம்மாதிரி மனிதர் மலமூத்திரங்களை மட்டும் சேகரித்துப் பக்குவப்படுத்தி செடிகளால் உடனே உபயோகப்படுத்தக்கூடிய எருவாய்ச் செய்வதில் மாத்திரம் சீன தேசத்து விவசாயிகள் சமர்த்தர்களென்று நினைத்துவிடக் கூடாது. அவர்கள் எல்லாவித குப்பை கூளம் போலொத்த இந்திரிய வஸ்துக்களடங்கிய எருச் சாமான்களை ரொம்பவும் கவனத்துடனும் சேகரித்துப் பத்திரப்படுத்தி வைப்பதிலும் அதிலிருக்கும் எருச் சத்துக்கள் உடனே பயிர்களுக்கு உபயோகப் படக்கூடிய விதமாய் அதை மாற்றக் கூடிய சக்தி யுடையவர்களென்று பேர் பெற்றிருக்கிறார்கள். ஒரு வஸ்துவிலிருக்கும் எருச்சத்துக்களை எவ்வளவு ஜாஸ்தியாய் செடிகளுக்கு உடனே உபயோகப்படுத்த வேண்டுமோ அவ்வளவுக்கு உபயோகிக்கிறார்கள். வேறு எந்த தேசத்தாரும் இவ்வளவு அக்கரையுடனும் சிரத்தையுடனும் செய்வதில்லையாம்.

சீன தேசத்தில் மனிதருடைய மல மூத்திரங்களைச் சேகரித்து எருவாய் உபயோகிப்பதையும், மற்ற இந்திரிய வஸ்துக்களடங்கிய குப்பை அவம்போகாமல் சேகரித்துக் கிராமங்களையும்பட்டணங்களையும் சுத்தமாய் வைத்துக் கொண்டிருப்பதையும், நாம் இங்கு நமது கிராமங்களிலும் பட்டணங்களிலும்வரும் குப்பை கூளங்களை அவமாக்கி மல மூத்திரங்களைச் சரியானபடி சேகரிக்காமல் அசுத்தமான வஸ்துக்களை சேகரித்து உபயோகப் படுத்தாத காரணத்தால் தொத்து வியாதிகளுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கப் பார்க்க அதிக வருத்தத்தை யுண்டாக்குகிற தென்பதற்கு எதாவது ஆட்சேபனையுண்டா? ஆகையால் இவ்விஷயத்தில் பொது ஜனங்களும் முனிசிபாலிடிகளும் யூனியன் போர்ட்டு தாலூக்கா போர்ட்டு ஜில்லா போர்டு அதிகாரிகளும் தக்க சிரத்தை எடுத்து சுகாதார விஷயத்தையும் விவசாய அபிவிருத்தியையும் கருதி சீன தேசத்து விவசாயிகளின் முறைகளை பின்பற்றப் பிரயாசைப் படவேணும். இக்காரணத்தைச் சுட்டித் தான் ராயல் விவசாயக் கமிஷன் அங்கத்தினர்கள் நமது இந்திய கிருஷிகர் சீனதேசத்து விவசாயிகளை எருச் சேர்ப்பதில் கவனித்து அவர்களைப் பின் பற்றுதல் நலமென்று எழுதியிருக்கிறார்கள். [கிருஷிகன்]

பஞ்சாயத்துகளும் பொதுஜன ஆரோக்கியமும்.

[லெப்டினெண்ட் கர்னல் ஏ. ஜே. எச். ரசல்,
பப்ளிக் ஹெல்த் டைரெக்டர்.]

இரண்டுபேர்கள் சந்திக்கும்பொழுது உடனேநேராக ஆகவேண்டிய காரியத்தைப்பற்றிப் பேசுவதில்லை. ஆனால் முதலில் பரஸ்பர

க்ஷேம சமாச்சாரங்களுடன் சம்பாஷணையை ஆரம்பிக்கிறார்கள். ஏனெனில் எல்லாவற்றிற்கும் மேலானதுப, மனிதர்களால் இந்த உலகத்தில் அடையக்கூடியவைகளில் அதிக உயர்ந்ததும், ஆரோக்கியமே யாகும். ஒரு மனிதன் ஆரோக்கியத்துடனும், திடகாத்திரனாய் இருந்தாலொழிய அவன் இந்த உலகததில் ஒன்றுக்கும் பிரயோஜனப்படமாட்டான். "சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம்," என்ற பழமொழியை நீங்கள் அனைவரும் கேட்டிருப்பீர்கள், அப்படியே இந்த உலகத்தில் ஒருவன் கல்விஞானம் பெறுவதற்கும், பணத்தை ஏராளமாகச் சம்பாதிக்கவும் ஆரோக்கியமாயும், பலத்துடனும்கூடி இருக்கவேண்டும். ஆகையால் ஆரோக்கியமான தேகம் வேண்டுமென்ற இச்சை ஒவ்வொருவருக்கும் முதன்மையாக இருக்கவேண்டும். நாம் எல்லோரும் வியாதிகளிலிருந்து நீங்கி நீண்டகாலம் வாழப் பிரியப்படுவோம்.

இதற்காக ஒவ்வொருவரும் தன் தேகத்தை ஆரோக்கியமான நிலைமையில் வைத்துக்கொள்ள விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும் தனித்தனியாக வாழ்ந்து வந்தால், ஒவ்வொருவரும் தன் தேக விஷயத்தைப் பற்றி மாத்திரம் கவலை எடுத்துக்கொண்டால் போதும். ஜனங்கள் கூட்டங்களாகவும், ஸமூகத்தில் சேர்ந்து வாழும்வரையில் அப்படிப்பட்ட பிரத்யேகமான கவலை எடுத்துக்கொண்டால் உண்மையில் போதாது. ஏனெனில், ஒருவன் தெரியாமலே செய்வது தன் தேகத்துக்கு சௌக்கியத்தைக் கொடுக்கலாம். ஆனால், அது இதரர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுக்கலாம். உதாரணமாக, சுத்தமாக வீடு வைத்துக்கொள்வது நல்லதுதான்; அதற்காக நாம் காலையிலும் மாலையிலும் வீட்டைக் கூட்டுகிறோம். அந்த வீட்டிலுள்ள குப்பையையும் துர்நாற்றமுள்ள வஸ்துக்களையும் சேர்த்து அடுத்த வீட்டுக் கொல்லைப் புறத்திலோ, ஜனங்கள் நடமாடும் பொது ரஸ்தாவிலேயோ, குவிப்பதாக வைத்துக்கொள்வோம். நாம் செய்தது நமக்கும் நம வீட்டிற்கும் உண்மையில் மிகவும் நல்லது. அப்பொழுது நம்முடைய வீடு அழகாயும், சுததமாயும் இருக்கிறது. ஆனால் நமது பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு மேற்கூறியபடி குப்பைகளைக் குவிப்பதால் பெரிய அபாயத்தை விளைவித்திருக்கிறோம். மறுபடியும் நமது வீட்டிலோ, முற்றத்திலோ, நம் குழந்தைகள் அங்கும் இங்கும் மலத்தைக் கழிப்பதினால் வீடு அசுத்தமாவதற்கு நாம் பொதுவாக பிரியப்படுவதில்லை: நமது வீடு சுத்தமாயும், நேர்த்தியாயும் இருக்கவேண்டுமென்று கூடியவரையில் மேற்படி அசுத்தங்களைத் தடுக்க நாம் முயலுகிறோம். ஆனால் இதற்காக நாம் கக்கூஸ் என்ற ஒரு பிரத்யேகமான இடத்திற்குக் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டுபோகவும், அந்த மலங்களைத் தோட்டியால் எடுக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்வதில்லை. நமக்கு வேண்டியதெல்லாம் நமது வீடு துர்நாற்ற மடையக்கூடாது என்பது தான். இது நல்ல எண்ணந்தான், இத்துடன் இதரர்களுக்கு என்ன ஏற்படுகிறதென்பதைக் கவனிக்கிறோமா? கவனிக்கிறதே இல்லை: நம்முடைய குழந்தைகளை ரகசியமாய்த் தெருவுக்கு

ஓடச்செய்து பக்கத்து வீட்டுக்கு எதிரில் மலத்தைக் கழிக்குமாறு செய்கிறோம். இது மிகவும் அலக்ஷியமான செய்கை. அடுத்தவீடோ அல்லது பொதுத் தெருவோ அசுத்தமடைந்தால் நமக்கு ஒன்றும் பாதகமில்லையென்று நினைக்கிறோம், ஆகையால் தன்னைப்பற்றிப் பிரத்யேகமான கவலை எடுத்துக்கொள்வதுடன், ஒருவன் மற்றவர்களுக்கு கெடுதல் விளைவிக்கக்கூடிய காரியத்தைச்செய்யாமலும் இருக்கவேண்டும். இதுதான் ஸமூக ஆரோக்கியத்திற்கும் பிரத்யேக சுக ஆரோக்கியத்திற்குமுள்ள வேறுபாடு.

பஞ்சாயத்து என்றால் என்ன ? அது, கிராமத்தின் பாதுகாப்புக்காக கிராமத்தாராலேயே அமைக்கப்பட்ட ஒருபொதுஸ்தாபனம். கிராமத்தின் முழுமைக்கும், பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது. கிராமத்திய குறைகளைக் கவனிப்பது அதனுடைய வேலையாகும். கிராமத்திற்கு வேண்டிய அத்யாவசியங்களுக்கு உபாயங்களை அப்பஞ்சாயத்து கண்டு பிடிக்கவேண்டும், கிராமத்தின் சேவைக்காகவும், பாதுகாப்புக்காகவும், க்ஷேமத்திற்காகவும் அது வேலை செய்து வருகிறது. ஆரோக்கியமா யிருப்பதைவிட அதிக அவசியமான விஷயம் கிராமத்தில் ஒன்றுமில்லை. கிராமத்தார் வியாதிகளிலிருந்து நீங்கியிருப்பதே எல்லாவற்றிற்கும் மேலானது, பஞ்சாயத்துக்குப் பொது ஜன ஆரோக்கியத்தைக் கவனிப்பதைவிட மேலான விஷயம் ஒன்றுமில்லை. முதலில் ஆரோக்கியமும் பிறகுதான் மற்றவையெல்லாம் கவனிக்கப்படவேண்டும்.

பஞ்சாயத்து எப்படி மேற்கூறிய காரியத்தை கைகூடச் செய்வது ?...ஒவ்வொரு கிராமவாசியும் ஆரோக்கியத்துடன்இருப்பதற்கு எப்படி ஏற்பாடு செய்யவேண்டும்? கிராமத்தை வியாதிகளிலிருந்து நீங்கியிருக்கச் செய்ய அது என்ன செய்யவேண்டும்? இது பெரிய தடுமாற்ற விஷயமா? பஞ்சாயத்தால் பரிஹாரம் தேடமுடியாத அதிகக் கஷ்டமான விஷயமா? இல்லவே இல்லை: இது அதிகப் பிரயத்தனம் இல்லாமலும், பணச் செலவு இல்லாமலும் சுலபமாய்ச் செய்யக்கூடிய காரியம். கிராமத்தில் அநேக சில்லறை விஷயங்கள் சரியாகக் கவனிக்கப்பட்டால், அதிக ஆச்சரியங்களை விளைவிக்கும். இவைகளை நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து ஒரு கருவியாகும். இது அபாரமான வேலையைச் செய்யக்கூடும். ஒரு வேளை புராணத்தில் சொல்லப்பட்ட ஹனுமானைப்போல, அது தன் அபார சக்திகளை அறியாமலிருக்கிறது: இது கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இது ஆரோக்கியத்திற்கான வேலைகளைச் செய்ய இஷ்டப்பட்டால் மாத்திரம் அதைக்கட்டாயம்முடித்துவிடும் "மனமிருந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழியை நீங்கள்கேட்டதில்லையா? உங்களுடைய கிராமப் பஞ்சாயத்திற்கு மேற்படி விஷயங்களில் இஷ்டக் குறைவு என்று நீங்கள் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள் ஒருவேளை அதற்கு இவைகளைச் செய்யவேண்டிய வழி தெரியாமலிருக்கலாம். ஆனால்ஆரோக்கியத்திற்குத் தகுந்த வழியை அது தெரிந்துகொள்ளக்கூடும். ஒவ்வொரு மாதமும் இது விஷயமாகக் காணப்படும் பக்கங்களை வாசித்து அதில்குறிப்பிட்டிருக்கும் [illegible]யமானவிஷயங்களை அனுஷ்டியுங்கள்.

சே. ப. புல்[illegible]

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அனுதினமும் உபயோகப்படுத்தினால் ப்ளேக் ஜ்வரம், ப்ளேக் கட்டிகள் கிட்ட நாடமாட்டாது.

குளிர்ஜ்வரம், முறைக்காய்ச்சல் ஜன்னியோடு,
உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித
ஜ்வரங்களுக்கு ராமபாணம்

எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கியபிரசித்தி

இண்டியா, பர்மா, சிலோன், ஏடன் முதலிய இடங்களில்
30 வருஷமாய் அநேக ஆயிரம் பிராணிகள்
ப்ளேக்கிலிருந்து காப்பாற்றப்படுவதே.

ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானகமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சததௌதக்ருதமும்

	பெரியசெட்.	1 க்கு 2—2—0
௸	சிரியசெட்	1—6—0

பாகிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்.

கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனாமாக அனுப்பப்படும்.

வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு
அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட
ஆயுர்வேத ஆசிரமம்

251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திவிலாசம்
'பண்டிட்"
மதராஸ்.

டெலிபோன்
நெ. 287, மதராஸ்

ஏஜண்டுகள் தேவை

இந்திய விவசாயம்.

— : (o) : —

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

TALISMANS & CHARMS

For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life

For Honour, Riches Learning and Greatness.	Rs.	7	8
For Health, physical Strength etc.	...	7	8
For Power of Eloquence, Speeches, etc.	...	7	8
For Success in any Undertaking or Litigation etc,	...	10	0
For Success in Sport Racing, Cards, games of Chance, etc.,		7	8
For Success in spiritual and Religious Life	...	10	0
For Success in Trade and Business	...	10	0
For Agricultural prosperity Farming, Good Crops etc.,		7	8
For Success in Mining Plumbago, etc.	...	100	0
For Success in Gemming	...	225	0
Reabbi Solomon's Special Talisman for every Success		15	0
Specially valued and worn by every successful Hebrew, 2nd quality		21	0
Do, 1st quality		30	0

NOTE— A Money Order or G, C, Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs, 15, two, Rs, 25, three, Rs, 30 or more at a time at Rs, 10 per reading. Remit with birth date, Always the full amount should be remitted in advance, No V. P. P.

Apply to:—D. A. RAM DUTH.

Astrologer, No. 30 and 55, (I. E.) Cheku Street, Colombo, CEYLON.

AMRUTANJAN

A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS

SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

and All Aches & Pains

Price 10 As a pot.

Amrutanjan Depot

Bombay & Madras

Published by MR A. RAJAGOPAL REDDI, President Forest Panchayatdars Union Ltd Madras *Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS CHINGLEPUT*